Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

Multiple Choice Question

1. ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் முதல் உறுப்பு 1 மற்றும் பொது வித்தியாசம் 4. இந்தக் கூட்டுத் தொடர்வரிசையின் எத்தனை உறுப்புகளைக் கூட்டினால் அதன் கூடுதல் 120 கிடைக்கும்?
   (a) 6 (b) 7 (c) 8 (d) 9

2. $A = 2^{65}$ மற்றும் $B=2^{64}+2^{63}+2^{62}+ \ldots + 2^0$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. பின்வருவனவற்றில் எது உண்மை?
   (a) B ஆனது A ஐ விட 2^{64} அதிகம் (b) A மற்றும் B சமம் (c) B ஆனது A-ஐ விட 1 அதிகம் (d) A ஆனது B–ஐ விட 1 அதிகம்

3. $\frac{3}{16}, \frac{1}{8}, \frac{1}{12}, \frac{1}{18}, \ldots$ என்ற தொடர்வரிசையின் அடுத்த உறுப்பு _____.
   (a) $\frac{1}{24}$ (b) $\frac{1}{27}$ (c) $\frac{2}{9}$ (d) $\frac{1}{81}$

4. $t_1, t_2, t_3, \ldots$ என்பது ஒரு கூட்டுத் தொடர்வரிசை எனில் $t_6, t_{12}, t_{18}, \ldots$ என்பது _____.
   (a) ஒரு பெருக்குத் தொடர்வரிசை (b) ஒரு கூட்டுத் தொடர்வரிசை (c) ஒரு கூட்டுத் தொடர்வரிசையுமல்ல, பெருக்கு தொடர்வரிசையுமல்ல
   (d) ஒரு மாறிலித் தொடர் வரிசை

5. $(1^3 + 2^3 + 3^3 + \ldots + 15^3) - (1 + 2 + 3 + \ldots + 15)$ யின் மதிப்பு _____.
   (a) 14400 (b) 14200 (c) 14280 (d) 14520

6. யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றத்தின் படி, a மற்றும் b என்ற மிகை முழுக்களுக்கு தனித்த மிகை முழுக்கள் q மற்றும் r, $a = bq + r$ என்றவாறு அமையுமானால், இங்கு r ஆனது, _____.
   (a) $1 < r < b$ (b) $0 < r < b$ (c) $0 \le r < b$ (d) $0 < r \le b$

7. யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றத்தைப் பயன்படுத்தி, எந்த மிகை முழுவின் கனத்தையும் 9ஆல் வகுக்கும் போது கிடைக்கும் மீதிகள் ____.
   (a) 0, 1, 8 (b) 1, 4, 8 (c) 0, 1, 3 (d) 1, 3, 5

8. 65 மற்றும் 117-யின் மீ.பொ.வ -வை 65m - 117 என்ற வடிவில் எழுதும்போது, m -யின் மதிப்பு _____.
   (a) 4 (b) 2 (c) 1 (d) 3

9. 1729-ஐ பகாக் காரணிப்படுத்தும் போது, அந்தப் பகா எண்களின் அடுக்குகளின் கூடுதல் _____.
   (a) 1 (b) 2 (c) 3 (d) 4

10. 1 முதல் 10 வரையுள்ள (இரண்டு எண்களும் உட்பட) அனைத்து எண்களாலும் வகுபடும் மிகச்சிறிய எண் ____.
    (a) 2025 (b) 5220 (c) 5025 (d) 2520

11. $7^{4k} \equiv$ _____ (மட்டு 100)
    (a) 1 (b) 2 (c) 3 (d) 4

12. $F_1 = 1$, $F_2 = 3$ மற்றும் $F_n = F_{n-1} + F_{n-2}$ எனக் கொடுக்கப்படின் F_5 ஆனது _____.
    (a) 3 (b) 5 (c) 8 (d) 11

13. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் முதல் உறுப்பு 1 மற்றும் பொது வித்தியாசம் 4 எனில் பின்வரும் எண்களில் எது இந்தக் கூட்டுத் தொடர்வரிசையில் அமையும்?
    (a) 4551 (b) 10091 (c) 7881 (d) 13531

14. ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் 6 வது உறுப்பின் 6 மடங்கும் 7 வது உறுப்பின் 7 மடங்கும் சமம் எனில், அக்கூட்டுத் தொடர்வரிசையின் 13-வது உறுப்பு _____.
    (a) 0 (b) 6 (c) 7 (d) 13

15. ஒரு கூட்டுத் தொடர்வரிசையில் 31 உறுப்புகள் உள்ளன. அதன் 16-வது உறுப்பு m எனில் அந்தக் கூட்டுத் தொடர்வரிசையில் உள்ள எல்லா உறுப்புகளின் கூடுதல் _____.
    (a) 16 m (b) 62 m (c) 31 m (d) $\frac{31}{2}$ m